பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

சுடர் 5 பிரமோதூத ஹூ புரட்டாதி மீ 27 உ சனிக்கிழமை (13-10-1990) ஹிஜ்ரி 1410 ற. அவ்வல் 23 கதிர் 220

# யாழ். பாடசாலைகள் திங்கள் முதல் இயங்கும்

## இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு அந்தந்தப் பகுதிகளிலேயே அனுமதி

யாழ்ப்பாணம், அக். 13

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் இயங்கும்.

நேற்று யாழ். கல்வி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இந்த முடிவு எடுக்கப்பட்டது

யாழ். மாவட்டப் பாட சாலைகளின் அபிவிருத்திச் சங்கங்களின் சம்மேளனத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கூட்டத்தில் 50 கொத்தணிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும், பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

வடமராட்சி கல்விப் பணிப்பாளர் திரு ஆர். சுந்தரலிங்கம் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பாதுகாப்புக் குறித்து கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்பட்டது.

இடம்பெயர்ந்த மாணவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மிதி வெடியில் இளைஞர் கால் இழப்பு

யாழ்ப்பாணம், அக். 13

காங்கேசன்துறையில் நேற்று மிதிவெடியில் சிக்கிய இளைஞர் ஒருவர் தமது வலது காலை இழந்தார்.

ஏழாலையைச் சேர்ந்த சின்னத்துரை திருச்செல்வம் [வயது 15] என்ற இளைஞனே காலை இழந்தவராவார். [ஓ-15]

## பலாலி ஷெல்கள் நேற்று பல பகுதிகளில் வெடித்தன

யாழ்ப்பாணம், அக் 13

நேற்றுக்காலை முதல் நண்பகல் வரை பலாலியில்இருந்து தூர இடங்களை நோக்கிப் பரவலாக ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டன.

உரும்பராய், கோண்டாவில், தாவடி, சுன்னாகம், ஆனைக்கோட்டை, நீர்வேலி, கோப்பாய் மற்றும் பல பகுதிகளில் ஷெல்கள் விழுந்து பெரும் சத்தத்துடன் வெடித்தன.

உரும்பராயில் தியாகி சிவகுமாரன் சிலைக்கு அருகிலும், கோண்டாவில் மேற்கில் உப்பு மடத்திலும், கோண்டாவில் கிழக்கிலும், சுன்னாகத்தில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சைக்கிளில் சென்றவர் கோண்டாவில் வீதியில் பலி

கோண்டாவில் மேற்கு உப்புமடம், காங்கேசன்துறை வீதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில்விழுந்த ஷெல்லுக்கு இலக்காகி, சைக்கிளில் சென்ற ஒருவர் அந்த இடத்திலேயே துடிதுடித்து மரணமானார்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் இணுவிலைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை மகாலிங்கம் [55 வயது] என்பவர் ஆவார்.

இவர் காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் கணக்காய்வு உத்தியோகத்தராகக் கடமையாற்றி வந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் சென்ற சைக்கிளின் மீது ஷெல் விழுந்துவெடித்ததில் சைக்கிள் சின்னாபின்னமாகி சிதறிப் போனதாகக் கூறப்பட்டது. [ஓ 15-3]

## காங்கேசன் ஆலை ஊழியர் பலி

மல்லாகம், அக். 13

காங்கேசன்துறை இராணுவ முகாமில் இருந்து நடத்தப்பட்ட சினைப்பர் தாக்குதலுக்கு இலக்காகி காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை ஊழியர் ஒருவர் மரணம் ஆனார்.

நேற்றுக் காலை 9. 30 மணி மணியளவில் நடந்த இந்தச் சம்பவத்தில் கொல்லங்கலட்டியைச் சேர்ந்த சி. அப்பித்துரை என்பவரே உயிரிழந்தவர் ஆவார். [ஓ-ரி]

### காமன்வெல்த் மூலம் தீர்வு

## ஆஸ்திரேலியப் பிரதமர் பிரேமதாசாவுக்குக் கடிதம்

மெல்போர்ன், அக். 13

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் காமன்வெல்த் இயக்கம் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று ஆஸ்திரேலியப் பிரதமர் திரு. ஹோப் யோசனை தெரிவித்திருக்கிறார்.

இலங்கை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றிலேயே திரு. ஹோப் இந்த ஆலோசனையைத் தெரிவித்திருப்பதாக ஆஸ்திரேலிய அரசாங்க வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இலங்கை அரசாங்கத்துக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் மக்கள் நடமாட்டம்; சில கடைகளும் திறந்திருந்தன

யாழ்ப்பாண நகரப்பகுதியில் பொதுமக்களின் நடமாட்டம் கணிசமான அளவு அதிகரித்து வருகிறது.

அண்மைக்கால பயங்கர இராணுவ நடவடிக்கையின் போது அதிர்ஷ்டவசமாக தப்பிய கடைகளில் சில நேற்றுத் திறக்கப்பட்டிருந்தன.

ஸ்ரான்லிவீதி, மற்றும் ஆஸ்பத்திரி வீதிப் பகுதிகளில் சில உணவுச்சாலைகள், சிலவாகன உதிரிப்பாகக்கடைகள் திறக்கப்பட்டு வியாபாரம் நடந்தது.

நகரில் ங்கிகளும் செயற்படத் தொடங்கியிருப்பதுடன் பொதுமக்கள் நகருக்கு சமான அளவில் வந்துசெல்கின்றனர். (ஓ-6)

## அனைத்துக் கட்சி மாநாட்டை முஸ்லிம் கட்சிகள் பகிஷ்கரிப்பு

### நிரந்தர இணைப்புக்கு ஆதரவில்லை?

கொழும்பு, அக். 13

வடக்கு - கிழக்கை நிரந்தரமாக இணைப்பது குறித்து முடிவு எடுப்பதற்காக நேற்றுக் கூடிய அனைத்துக் கட்சி மாநாடு பெரும் தோல்வியில் முடிந்தது.

ஜனாதிபதி பிரேமதாசா நேற்றுக் கூட்டிய பிரஸ்தாப மாநாட்டில் முஸ்லிம் அரசியல் கட்சிகள் கூட்டணி கலந்து கொள்ளாது பகிஷ்கரித்தது.

வடக்கு - கிழக்கு நிரந்தர இணைப்பு, வடக்கு - கிழக்கு அதிகாரப்பரவல் ஆகிய விஷயங்கள் குறித்து பொதுக் கருத்து உடன்பாடு ஒன்றைக் காணுவதே மாநாட்டின் நோக்கமாக இருந்தது.

முஸ்லிம் அரசியல் கட்சிகள் கூட்டணி கலந்து கொள்ளாததன் காரணமாக வடக்கு - கிழக்கு நிரந்தர இணைப்பு விஷயத்தில் பொதுக் கருத்து ஒன்றை உருவாக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

அனைத்துக்கட்சிகள் மாநாட்டில் தொடர்ந்தும் கலந்து கொள்ளப் போவது இல்லை என்ற தமது முடிவில் மாற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பளை: ஹெலி தாக்கு

மல்லாகம், அக் 13

தெல்லிப்பளை, வீமன்காமம் பகுதிகளில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் வட்டமிட்ட ஹெலி ஒன்று குடியிருப்பு பகுதிகளை நோக்கி தாக்குதலை நடத்தியது.

இந்தத் தாக்குதலின்போது பார் மணியம் வீதியில் நா. அருமைரத்தினம் என்பவர் காயமடைந்தார். (ஓ ரி)

## சங்கானையில் ஹெலி சூடு; காரைநகர் வாசி மரணம்

சங்கானையில் நேற்று மாலை 5 45 மணியளவில் ஹெலி நடத்திய தாக்குதலில் காரைநகர் வாசி ஒருவர் மரணமானார்

ஆறுமுகம் நவரெத்தினம் (வயது 45) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

சங்கானை ப.நோ.கூ. சங்கத்துக்கு முன்பாக வீதியில் சென்றுகொண்டிருந்த போது பிரஸ்தாப நபர் ஹெலி சூட்டுக்கு இலக்கானார்.

வயிற்றில் காயமடைந்த அவர் உடனடியாக மானிப்பாய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது: எனினும் இரத்தப் பெருக்கு காரணமாக அவரது நிலை மோசமடைந்தது

ஆஸ்பத்திரி இரத்த வங்கியில் அவருக்குச் சிகிச்சைக்குத் தேவையான இரத்தம் கையிருப்பில் இல்லாததால் அவரைக் காப்பாற்ற முடியாத நிலை ஏற்பட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் கவலை தெரிவித்தன. [ஓ-15-3-5]

## விக்ரருக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், அக் 13

மன்னார் அடம்பனில் வீரமரணமடைந்த லெப்டினன்ட் கேணல் விக்ரரின் நான்காவது ஆண்டு நினைவு நாள் நேற்று குடாநாடு எங்கும் அனுஷ்டிக்கப்பட்டது.

[illegible] பந்தல்கள் அமைத்தும் [illegible] படங்களை இலச்சினை அஞ்சலி செலுத்தப்பட்டது. [இ-5]

## ஊர்காவற்றுறை ராணுவம் மக்களை விரட்டுகிறது

யாழ்ப்பாணம், அக். 13

ஊர்காவற்றுறைப் பகுதி மக்களை அப்பகுதிக்கு வர வேண்டாம் என்று அங்குள்ள இராணுவத்தினர் மிரட்டி விரட்டுவதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதனைத் தொடர்ந்து ஊர்காவற்றுறைப் பகுதி மக்கள் சுருவில் பகுதிக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

ஊர்காவற்றுறைப் பட்டினப் பகுதியில் அந்தனீஸ் கல்லூரி, ஆஸ்பத்திரி, தேவாலயம் மற்றும் பல கட்டடங்களில் படையினர் முகாமிட்டுள்ளனர்என்பதுதெரிந்ததே.

இராணுவத்தினர் அங்கு பனை மரங்களை தறித்து மிக உயர்ந்த ''சென்றி'' களை அமைத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது [ஓ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

### மல்லிகைப் பந்தல்

மல்லிகை ஜீவா, தூண்டில், ஒரு நாவில் மறைந்த இரு மாலைப் பொழுதுகள் வெளியீடுகளை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். வேறு புத்தகங்களும் எம்மிடம் உண்டு. மல்லிகை காரியாலயத்திற்கு வருகை தாருங்கள். (14423)

### "கானகத்தின் கானம்"

மீரா வெளியீடு தெளிந்து நீரோடையாக ஆரம்பிக்கும் இந்நாவலை தென்றலாக கொண்டு சென்று புயலாகவே முடித்திருக்கிறார். "செம்பியன் செல்வன்" 27/-ரூபா தர்ஷா ஸ்ரேசனேர்ஸ், கன்னாசம், திருக்கணிநம், சாவகச்சேரி, ஸ்ரீராந் புத்தக சாலை, நல்லூர், யாழ்ப்பாணம். (14417)

### கோழித்தீன்

கோழித்தீன் வகைகள் கலந்து கொடுக்கப்படும்; கோழித்தீன் விற்கப்படும். மூலதாரப் பொருட்கள் அரைத்துக் கொடுக்கப்படும்; மீன்பிடி வலைக்கு பயன்படுத்தப்படும் கண்டல் பட்டை மொத்தமாகவும், சில்லறையாகவும், பெற்றுக்கொள்ளலாம்: சிவா மில்ஸ் அன் இண்டஸ்றீஸ், 46/1, பிறவுண் வீதி, 4 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (14402)

### றோனியோ

மீண்டும் றோனியோ தமிழ் ஆங்கில தட்டச்சு சகல விதமான அச்சுவேலைகளும் சிறந்த முறையில் செய்து கொள்ள நாடுங்கள்: தயா அச்சகம் இல. 138, நாவலர் றோட், யாழ்ப்பாணம். நேரம்: காலை 9.00 - 12.00 மணி வரை. (14372)

### பேபி நீட்ஸ்

59 நவீன சந்தையில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் தற்போது கே.கே.எஸ் வீதி, தாவடி (சந்திக்கு அருகாமையில்) தற்காலிகமாக இயங்கி வருகின்றது. என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். [14405]

### போட்டோஸ்ரட்

தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளையும் அடையாள அட்டைகளையும் கவர் இட்டு உடனடியாகப் பெற்றுக் கொள்ள கிளீன்கட் 37, சிவகுருநாதன் வீதி, பிறவுண் றோட் யாழ்ப்பாணம். நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் வேலை நேரம் தினமும் காலை 6மணி தொடக்கம் மாலை 6மணி வரை. [14362]

### தவறிவிட்டது

நாரந்தனை வடக்கு பெரியபுலம் வீதியைச் சேர்ந்த ஜோசப் அன்ரன் ஜெயக்குமார் என்பவருடைய அடையாள அட்டையும் (இல. 670541622V), டயறி, உடுப்புடன் கூடிய கைப்பையும் (P P - Bag) 08-10-90ல் யாழ்ப்பாணம், கச்சேரி நல்லூர் வீதிக்கும் ஓட்டு மடத்திற்கும் இடையில் (நாவலர் வீதியில்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன்பணிமனையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (14429)

### வைத்திய சேவை

Dr. C. C. S ராஜன் கிருஸ்ணா கிளினிக் அராலி வீதி [பொம்மை வெளி] யாழ்ப்பாணம். [13893]

### நெடுந்தீவு பாடசாலைகள்

நெடுந்தீவு' அக். 13 நெடுந்தீவு கொத்தணிப் பாடசாலைகள் எதிர்வரும் 15 ஆம்திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன. (இ-111)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்:
20 - 07 - 1947

ஆண்டவனடியில்:
16 - 10 - 1987

திதி:
13 - 10 - 1990

### அமரர் கந்தசாமி சண்முகநாதன்
[பேபி]

எங்கள் அன்புத் தெய்வமே!
நீங்காத உங்கள் நினைவுகள்
நம் நெஞ்சை விட்டு அகலவில்லை - என்றும்
நீங்களில்லா எம்வாழ்க்கை நீர் இல்லா ஓடை போல
நிஜமில்லா உறவை நம்பி
எம்மைத் தவிக்க விட்டு - நீங்கள்
நிலையான வாழ்வைத் தேடிச் சென்றதேனோ?

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனை இறைஞ்சும்.

அன்பு மனைவி, ஆசைமகன்.
ஆசை மகள், தாய்,
சகோதரர்கள்.

[14433]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
பாறுவதிப்பிள்ளை
இருஷ்ணபிள்ளை
(பாக்கியம்)

மண்ணில்:
21 - 10 - 1925

விண்ணில்:
13 - 09 - 1990

திதி:
13 - 10 - 1990

பொங்கும் நினைவுகள்
எங்களை வாட்டுதே
எங்கு சென்றினி
ஆறுதல் தேடுவோம்?
திங்கள் மாறிப்
பல்லாண்டுகள் ஆகினும்
எங்கள் நெஞ்சினில்
என்றும் உள்ளீரே.

உங்கள் பிரிவால்
துயருறும்:
கணவன்,
பிள்ளைகள்.

புலோலி தெற்கு.
புலோலி.
[14431]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்　　தாயக மீட்பில்
17 - 08 - 1975　　13 - 09 - 1990

### வீரவேங்கை குருபரன்
### சங்கரலிங்கம் யோகசேகரன்
(கரன்)

கோட்டைக்குள் புகுந்துவெற்றிகொண்ட
பதின்மூவரில் நீயும் ஒரு புலியாக...
உள்ளம் உறைக்கின்றது
கண்கள் கலங்குகின்றது- ஆனால்
உன் கனவை நனவாக்க
ஊழித்தாண்டவம் இங்கு நடந்தேனும்
புரட்சிகீதமொன்று புயலுடன் மோதும்
மலரும்... மலரும்... தமிழீழம்
சுதந்திர மண்ணில்
கோட்டை மதிற்கல் கொண்டு
புதைகுழி அமைப்போம் உனக்கு
கடமையை ஒப்படைத்து விட்டு
கண்ணுறங்கு குருபரா!
சுதந்திர விடியலின் பொற்கதிரால்
துயிலெழுப்பும் வரை வீரனே!
நிம்மதியாய் உறங்கு நிரந்தரமாய் அல்ல.

உமதுபிரிவால் வாடும்;
பெற்றோர், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்
[14421]

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### திருமதி மாலினி நாகேஸ்வரன்
(ஆசிரியை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

மலர்வு:　　உதிர்வு:
04 — 03 — 1960　　11 — 09 — 1990

அன்றைய பொழுது
அப்படி விடிந்தது!
அவலமான செய்தி
காதிலே விழுந்தது!
ஓ. எங்கள் மாலினி......
நம்ப முடியவில்லை!
நம்பவே முடியவில்லை!
பொம்பர் பறந்து வந்து
எம் வீட்டின் மேலே
குண்டொன்றை வீசியது
என்பது போலே
அதிர்ந்து போய்
நின்றோம்!
அதிர்ந்து போய்
நிற்கின்றோம்!
நம்ப முடியவில்லை!
நம்பவே முடியவில்லை!
எங்களது உள்ளத்தில்
என்றென்றும் அகலாது
உந்தன் எழிலுருவம்
உட்கார்ந் திருக்கையில்......
நம்ப முடியவில்லை!
நம்பவே முடியவில்லை!
ஆயினும்,
ஒரு மாத மாயிற்று
என்கின்றார்......
ஆதலின், உந்தன்
ஆத்ம சாந்திக்கு
ஆண்டவனை
வேண்டுகின்றோம்!

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாப செய்தி அனுப்பியவர்களுக்கும் பலவழிகளில் உதவி நல்கிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் 14-10-1990 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறும், வீட்டுக் கிரித்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

கணவன், பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

இமையாணன் வடக்கு,
உடுப்பிட்டி.
[14435]

## மரண அறிவித்தல்

### திரு. சாமுவேல் ஜெபேந்திரன் மயில்வாகனம் [ஜெபா]

பொன்னாலையைச் சேர்ந்த சாமுவேல் ஜெபேந்திரன் மயில்வாகனம் திங்கள் 08 - 10 - 90 அன்று மேற்கு ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

அன்னார் திரு A.J M. மயில்வாகனம்(J P.), திருமதி கிருபைமலர் மயில்வாகனம் தம்பதியினரின் ஏகபுதல்வரும்; திருமதி மயிலா தர்மராஜ், திருமதி ஞான கௌரி மைக்கல் ஆகியோரின் அன்புச் சகோதரரும்: காலஞ்சென்ற L. J. தர்மராஜ், திரு. J J. மைக்கல் ஆகியோரின் மைத்துனரும், செல்வி கிருஸ்டினியின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு மேற்கு ஜேர்மனியில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்;
ஜே. ஜே. மைக்கல்.

'மலர் வாசம்'
பொன்னாலை,
சுழிபுரம்.
[14434]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெயர்ந்த மாணவர்:

# புதிய பாடசாலைகளில் சேர

# ஆவணம் ஏதும் தேவையில்லை

யாழ்ப்பாணம், அக். 13

வெளிமாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்த மாணவர்களிடம் இருந்து ஆவணங்களைக் கோராது அவர்களைப் பாடசாலைகளில் அனுமதிக்க வேண்டும். ஆவணங்களைக் கேட்டு அவர்களை நிர்ப்பந்திக்கக் கூடாது.

யாழ். மாவட்ட பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது சம்பந்தமாக யாழ் கல்வி அலுவலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட மற்றும் முடிவுகள் வருமாறு:

★ அதிபர்கள், ஆசிரியர்கள் வழமைபோல் பாடசாலைகளுக்குச் சமுகமளிக்க வேண்டும்.

★ பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டால் சகல பாடசாலைகளையும் மீளத்திறந்து நடத்தலாம். எல்லா வகுப்புக்களையும் நடத்தலாம்.

★ 50 மாணவர்களுக்கு ஒரு பதுங்குகுழி என்ற கணக்கில் அவை அமைக்கப்பட வேண்டும்.

★ சகஜநிலை திரும்பும் வரை ஒரு நேரப்பாடசாலை நடத்தலாம்

★ போக்குவரத்து வசதி திரும்பும்வரை மாணவர்களை வசிப்பிடங்களுக்கு அருகில் உள்ள பாடசாலைகளில் தற்காலிகமாகக் கல்வி பயில வசதி செய்யலாம்.

★ அங்கிகளில் தங்கியுள்ள பாடசாலைகள் தொடர்பாக உதவி அரசாங்க அதிபர்களின் ஆலோசனைப்படி அதிபர்கள் மாற்று ஒழுங்கு மேற்கொள்ளவேண்டும். அந்த மாற்று ஒழுங்கு குறித்து உதவிக் கல்விப்பணிப்பாளர்களுக்கு அறிவிக்கவேண்டும்.

★ சேதமடைந்த பாடசாலைகள் தொடர்பாக அதிபர்கள் உதவிக் கல்விப்பணிப்பாளருடன் ஆலோசித்து மாற்று ஒழுங்கு மேற்கொள்ள வேண்டும். (இ-3)

## கிளிநொச்சி விவசாய பீடமும் நவ. 5 முதல் இயங்கும்

கிளிநொச்சியில் நிறுவப்பட்டுள்ள யாழ் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடமும் எதிர்வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட இருப்பதாக யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. கே. பரமேஸ்வரன் தெரிவித்தார்.

இந்த விவசாயபீடம் அண்மையிலேயே நிர்மாணிக்கப்பட்டது. புதிய மாணவர்கள் தெரிவும் அண்மையிலேயே இடம் பெற்றது.

தமிழ்ப் பிரதேசத்தில் ஒரே ஒரு விவசாய பீடமான இதில் இம்முறைதான் முதன் முதலாக விரிவுரைகள் ஆரம்பமாகின்றன என்பது குறிப்பிடத்தக்கது (இ - 6)

## படகில் இருந்த இளைஞர்மீது படையினர் தாக்குதல்

நெடுந்தீவு, அக். 13

நெடுந்தீவில் இருந்து பிரயாணிகளுடன் புறப்பட்ட படகு ஒன்று நடுக்கடலில் கடற்படைப் படகு ஒன்றினால் வழி மறிக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அந்தப் படகில் வந்த இளைஞர்கள் தாக்கப்பட்டனர்.

சோதனை மேற்கொண்ட கடற்படையினர் பயணிகள் தம்முடன் கொண்டு வந்த தேங்காய், பனாட்டு என்பவற்றை எடுத்துக் கொண்டனர்.

படகில் கட்டப்பட்டிருந்த தேசியக் கொடியையும் படையினர் அபகரித்தனர்.

(இ - 111)

முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு

## ஜனசக்தி, உணவுமுத்திரை வழங்க காசோலை வந்தது

யாழ்ப்பாணம், அக். 13

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஜனசக்தி, உணவுமுத்திரை போன்றவற்றுக்குரிய கொடுப்பனவுகளை வழங்குவதற்குரிய நிதி காசோலைகளாக யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டுள்ளது.

திருகோணமலை மாகாண சபை அலுவலகத்தில் இருந்து இதற்கான ஐம்பது லட்சம் ரூபா காசோலைகள் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இந்தக் காசோலைகள் தற்போது யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின்பொறுப்பில் உள்ளதாகவும் –

அவற்றை தகுதிவாய்ந்த அதிகாரிகள் பொறுப்பேற்க வேண்டும் என்றும் – தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-3]

## பாவனைப் பொருள்களை விற்று சீவிக்கும் அகதிகள்

மாங்குளம், அக். 13

புதுக்குடியிருப்பில் அகதிகள் தமது சொந்தப் பாவனைப் பொருள்களை விற்று சீவியம் நடத்துகின்றனர்.

ஈயச்சட்டி, செம்பு, குடம், குத்துவிளக்கு ஆகிய வீட்டுப் பொருள்களே இவர்களால் விற்கப்படுகின்றன. இப்பொருள்களுக்கு விலைத்துண்டும்போடப்பட்டுள்ளது.

இந்த அகதிகளுக்கு உரிய நிவாரணங்கள் கிடைக்காததாலேயே இந்நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. [இ- 94]

## குவைத்தில் 35 ஆயிரம் இலங்கைப் பணிப் பெண்கள்

ஜெனிவா, அக். 13

இலங்கையைச் சேர்ந்த சுமார் 35 ஆயிரம் வீட்டுப் பணிப்பெண்கள் குவைத்தில் நிர்க்கதிக்குள்ளாகி இருப்பதாக ஜெனிவாவில் உள்ள ஐ. நா. நிவாரண அதிகாரிகள் தெரிவித்தனர்.

குவைத்தில் இருந்து வெளியேற போக்குவரத்து வசதி இன்றியும்—

கையில் செலவுக்கு ஒரு சதம் தானும் இல்லாத நிலையிலும்—

இலங்கைப் பெண்கள் கைவிடப்பட்ட வீடுகளிலும், உடைந்த கட்டடங்களிலும் தலைமறைவாக வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருக்கின்றனர் என்று ஐ. நா. அதிகாரிகள் ஜெனிவாவில் கூறினர் என்று பி. பி. சி. தெரிவித்துள்ளது.

இலங்கைப் பெண்களில் பெரும்பாலோர் இளம் வயதினர் என்றும்—

வீடுகளில் பணிப்பெண்களாக பணிபுரிந்து வந்தனர் என்றும்—

குவைத்தை ஈராக்படைகள் ஆக்கிரமித்ததைத் தொடர்ந்து, இவர்களுக்குத்தொழில் வழங்கியோர் இவர்களைக் கைவிட்டு நாட்டைவிட்டு வெளியேறிவிட்டனர் என்றும்— மேலும் தெரிவிக்கப்பட்டது.

இப்பெண்களை சொந்த நாட்டுக்கு அனுப்பி வைக்க ஐ. நா. அகதிகள் நிறுவனத்திடம் பணம் உள்ளது.

ஆனால் ஈராக் அதிகாரிகளின் கெடுபிடிகள் காரணமாக, அவர்களை வெளியேற்றும் நடவடிக்கை தடுக்கப்பட்டுள்ளதாக ஐ. நா அதிகாரிகள் தெரிவித்தனர்.

உணவுக்குப் பெரிதும் கஷ்டப்படும் இந்த இலங்கைப் பெண்கள் ஈராக் படையினரின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளுக்கு ஆளாகின்றனர் என்று முறைப்பாடு வந்துள்ளது என்றும் பி. பி. சி. தெரிவித்தது. (இ-எ)

## சுண்டங்காய் கால் பணம் சுமை கூலி....!

கொக்குவில், அக் 13

கொக்குவில் பகுதியில் 800 ரூபாவுக்குத் தீர்க்கப்பட்ட ஒரு டிராக்டர் லோட் எருவை ஏற்றிப்பறிக்க 950 ரூபாவுக்கு மேல் செலவாகியதாம்.

எரிபொருள் விலைஏற்றமே இதற்குக் காரணம் ஆகும்.

ஏற்கனவே பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி உள்ள விவசாயிகளுக்கு இது மேலும் சுமையாக இருந்து வருகிறது. [இ-64]

## கத்தியால் குத்திக் கொலை!

மாங்குளம், அக். 13

மருமகனின் கத்திக் குத்துக்கு இலக்காகி மாமனார் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் மாங்குளம் சாரைகடியில் கடந்த ஞாயிறு இடம்பெற்றது.

குடும்பச் சச்சரவு கத்திக் குத்தில் முடிந்ததை அடுத்து ஞானம் என்ற வயோதிபர் உயிரிழந்தார். (உ-94)

## குடும்பங்கள் வெளியேற வீதியில் நாய்கள்!

நெடுந்தீவு, அக் 13

நெடுந்தீவை விட்டு இது வரை சுமார் அறுநூறுக்கும் அதிகமான குடும்பங்கள் வெளியேறி விட்டன. இவர்களின் வீடுகளில் வளர்த்த நாய்கள் உணவு கிடைக்காது வீதிகளின் ஊளையிட்டபடி அலைந்து திரிகின்றன.

கடுமையான வெப்பத்தின் தாக்குதலாலும் பட்டினி நிலையாலும் இந்த நாய்கள் ... விடுமோ என பொதுமக்கள் அஞ்சுகின்றனர். (இ-111)

---

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் நடாத்தும்

# மாவீரர் தின கலை கலாசாரப் போட்டிகள்

**தமிழீழ மக்களே!**

★ இவ்வாண்டு மாவீரர் தினத்தையொட்டி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் எழுத்தாளர் கலைஞர்கள், மற்றும் இத்துறையில் ஆர்வமிக்கோர், மாணவர்கள் அனைவரையும் ஊக்குவிப்பதற்காகவும், அவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்காகவும் கலை கலாசாரப் போட்டிகளை நடாத்தவுள்ளது.

★ இப்போட்டிகள் கீழ்க்காணும் விடயங்களில் நடைபெறவுள்ளன.

★ நாவல் ★ சிறுகதை ★ கவிதை
★ கட்டுரை ★ சுவரொட்டி

★ போட்டிகள் அனைத்தும் மாணவர்களுக்கு வேறாகவும் மற்றையோருக்கு வேறாகவும் இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளது

★ தமிழீழத்தில் அதியுயர் கௌரவமிக்க பரிசுகள் வழங்கப்படவுள்ள இப்போட்டிகளில் ஆர்வமும் ஆற்றலுமிக்க அனைவரும் கலந்துகொள்ளலாம்.

## போட்டிகளுக்கான விதிமுறைகள்

★ தமிழீழ மக்கள் எவரும் கலந்து கொள்ளலாம்.

★ படைப்புக்கள் யாவும் தமிழீழ விடுதலைப் போரை அடிப்படையாகக் கொண்டு அதனை முன்னெடுத்துச் செல்லும் கருத்துக்கள் செறிந்ததாகவும், சமகால எமது மண்ணினதும் மக்களினதும் பிரச்சினைகளை அடிநாதமாகக் கொண்ட யதார்த்தத் தன்மை மிக்கதாகவும் இருத்தல் அவசியம். மண் மீட்புப்போரில் இன்னுயிர் ஈந்த வீரவேங்கைகளினதும், வீராங்கனைகளினதும் உணர்வுகளையும், இதய தாகத்தையும்பிரதிபலித்தல் வேண்டும்.

★ சுவரொட்டிக்கான கருப்பொருட்களும் மேற்குறிப்பிட்ட தன்மை மிக்கதாகவே இருத்தல் வேண்டும்.

★ இலக்கியப் படைப்புக்கள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதப்பட்டதாக அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்

★ ஒவ்வொரு படைப்பிலும் மூன்று பிரதிகள் அனுப்புதல் வேண்டும்.

★ சிறுகதைகள் 10 பக்கங்களுக்கு மேற்படாததாகவும் நாவல்கள் 100 பக்கங்களுக்குக் குறையாததாகவும் இருத்தல் வேண்டும்.

★ கவிதைகள் 60 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ சுவரொட்டிகள்யாவும், ஆட்போட்டில் 60cm × 40cm அளவு கொண்டதாக வண்ணப் படங்களாகவோ [எந்தவண்ணமும் உபயோகப்படுத்தலாம்] கறுப்பு வெள்ளைப்படங்களாகவோ வரைந்து அனுப்பலாம்

★ போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களது படைப்புகள் அவர்களது பாடசாலை அதிபர் அல்லது வகுப்பாசிரியர் ஆகியோர் மூலம் அவர்களது சொந்தப் படைப்புத்தான் என்பது உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

★ போட்டிக்கான கட்டுரைகள் 3000 - 5000 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் நல்லது

★ போட்டிகளுக்கான படைப்புகள் அனுப்பப்பட வேண்டிய இறுதித்திகதி 25 10 1990

★ அனைத்து ஆக்கங்களும் மே/பா 146 என்ற இலக்கமிட்டு உதயன் அலுவலகத்திற்குக் குறிப்பிட்ட திகதிக்கு முன் அனுப்பிவைக்கப்படல் வேண்டும் அல்லதுபடைப்பாளிகளின் சொந்த ஊரின் விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணிப்பிரதேசப் பொறுப்பாளரிடம் நேரில் கையளிக்க வேண்டும்.

★ தகுதிவாய்ந்த நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியாகும்.

## மாணவர்க்கான போட்டிகள் பற்றிய சிறப்பு விதிகள்

★ மாணவர்க்கான போட்டிகள் பின்வரும் விடயங்களில் நடைபெறும்.

1) சிறுகதை 2) கவிதை 3) கட்டுரை 4) ஓவியம்

★ சிறுகதை, கவிதை, ஓவியம் ஆகியன முன்னர் மேலே குறிப்பிட்ட தன்மைகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

★ ஓவியங்கள் 18'' × 12'' அளவு கொண்டதாக இருத்தல் வேண்டும்.

★ கட்டுரைகள் கீழ்வரும் அம்சங்களைக் கொண்டதாகவும் 2500 சொற்களுக்கு மேற்படாததாகவும் அமைதல் வேண்டும்.

1) விடுதலைப் போராட்டமும் மாணவர் பங்களிப்பும்
2) தமிழீழத்தின் பொருளாதார அபிவிருத்தி
3) தமிழீழ மாணவர்களது கல்வியின் எதிர்காலம்.
4) இன்றைய சூழ்நிலையில் மாணவர்களின் சமூகப்பணிகள்.
5) போராடுவதற்காக கற்போம்.

★ மாணவர்களுக்கான போட்டிகள் யாவும் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பகுதிகளாக நடாத்தப்படும்.

15 வயதிற்குட்பட்டோர் கீழ்ப் பிரிவு
15 — 17 வயதிற்கிடைப்பட்டோர் மத்திய பிரிவு
17 வயதிற்கு மேற்பட்டோர் மேற்பிரிவு

★ ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியாகப் பரிசுகள் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிதிவெடிகள் அகற்றப்பட்டாலேயே கிளிநொச்சி ஆஸ்பத்திரி இயங்கும்

யாழ்ப்பாணம், அக் 13 கிளிநொச்சி வைத்தியசாலைப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் பூரணமாக இன்னமும் அகற்றப்படவில்லை.

இதனால் வைத்தியசாலையை இயங்கவைப்பது தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலை கட்டடங்களில் பாரியதிருத்த வேலைகள் எதுவும் இல்லை என்றும் மிதிவெடிகள் அகற்றப்படும் பட்சத்தில் வெளிநோயாளர் பிரிவை உடனடியாக ஆரம்பிக்கலாம் என வன்னியில் அங்கு சென்று திரும்பிய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். [இ-5-6]

## விசர்நாய்க்கடி: இறந்தோர் விவரம் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம், அக் 13 தமிழ் மாவட்டங்களில் விசர்நாய்க்கடி நோயால் இறந்தவர்களின் விவரங்களை ஜெனீவாவில் உள்ள செஞ்சிலுவைச் சங்கம் கோரி உள்ளது.

விசர்நாய்க்கடி தடுப்பு மருந்து தட்டுப்பாட்டால் பலர் இறக்கிறார்கள் என்றும் ஸ்ரீலங்கா அரசு போதியளவு தடுப்பு மருந்தை தருவதில்லை என்றும் செஞ்சிலுவைச் சங்கம் ஜெனீவாவில் இயங்கும் தலைமையகத்துக்கு தெரிவித்திருந்தது.

இதனை அடுத்தே பாதிக்கப்பட்டுள்ளவர்கள், இது வரை இறந்தவர்கள் ஆகியோரது விபரங்களை அந்தச் சங்கம் கோரியுள்ளது.

இந்த நோயால் இறந்தவர் விவரங்களை யாழ்-செஞ்சிலுவைச் சங்கத்தில் பதியுமாறு கோரப்பட்டுள்ளது [இ-35]

### மீன்வாடி

குருநகர் மீன்சந்தைப்படுத்தும் வாடி தற்காலிகமாக தொடர்மாடி குடியிருப்புப் பகுதியில் இயங்கி வருகிறது.

நிரந்தரமான மீன்வாடி யாழ். கோட்டைத் தாக்குதலால் பாரிய சேதம் அடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது (இ-51)

### வவுனியா கிளிநொச்சி மினிபஸ்சேவை

கிளிநொச்சி, அக். 13 கிளிநொச்சி வவுனியா மினி பஸ் சேவை தற்போது மீண்டும் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

பயணக்கட்டணமாக பிரயாணிகளிடம் இருந்து 2 ரூபா 50 சதம் அறவிடப்படுகின்றது (இ-76)

## கிளிநொச்சி ஆசிரியருக்கு 3 மாத சம்பளம் இல்லை

கிளிநொச்சி, அக். 13 கிளிநொச்சி மாவட்ட ஆசிரியர்களுக்கு ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களுக்குரிய-சம்பளக் கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை.

கிளிநொச்சியில் பாடசாலைகள் வழமைபோல் நடைபெற்று வருகின்றன. வங்கிகளும் ஓரளவு சீராக இயங்கி வருகின்றன. எனினும் ஆசிரியர் சம்பளம் கடந்த 3 மாதங்களாக வழங்கப்படவில்லை. இதனால் கிளிநொச்சி மாவட்ட ஆசிரியர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர் [உ-76]

### மரம்நடுகை கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்தில் மரம் நடுகை தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

வனபரிபாலன இலாகாவின் யாழ் மாவட்ட உதவிப் பணிப்பாளர், மாநகரசபை ஆணையாளர், நகரசபை செயலாளர்கள், மற்றும் உள்ளூராட்சித் திணைக்கள சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்படப் பலரும் இந்த கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்று பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவித்தார் (இ)

### வெடிக்காத ஷெல்கள்

யாழ்ப்பாணம், அக் 13 யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வளவுக்குள் இருந்து வெடிக்காத இரண்டு ஷெல்கள் கண்டெடுக்கப்பட்டன.

இந்த வைத்தியசாலையை துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்களினாலேயே இவைகள் கண்டெடுக்கப்பட்டன. [இ-115]

### கோயிலில் திருட்டு முயற்சி

கொக்குவில், அக். 13 யாழ் வைத்தீஸ்வரா சந்திக்கு அண்மையிலுள்ள வெள்ளாந்தெரு வைரவர் ஆலயத்தில் திருட்டு முயற்சி இடம் பெற்றுள்ளது.

விக்கிரகம் பெயர்க்கப்பட்டு அங்கு வைக்கப்பட்ட பொருள்களை திருட எத்தனித்தவர்கள் கோவிலுக்குச் சொந்தமான வாள் ஒன்றை எடுத்துக் கொண்டு சென்றுவிட்டனர் என்று கூறப்படுகிறது.

இதுபற்றி [illegible] செய்யப்பட்டுள்ளது. [இ-69]

---

## 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும்

### செல்வன் தியாகராசா ஸ்ரீதரன்

தோற்றம்:- 30 - 12 - 1956 மறைவு:- 03 - 09 - 1990

03 - 09 - 90 இல் இயற்கையெய்திய அன்னாரது இறுதிச் சடங்கின்போது சமுகமளித்து ஆதரவு நல்கி, அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

14 - 10 - 90 இல் அளவெட்டி வடக்கு 'அன்பகம்' இல்லத்தில் அன்னாருக்கு நடத்தும் வீட்டுக்கிருத்தியத்தின்போது உற்றார், உறவினர், நண்பர்களை பங்குபற்றும்படி விநயத்துடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மு. தியாகராசா [தந்தை], தாய், சகோதர, சகோதரிகள்.

கோபால் ஒழுங்கை, வண்ணார்பண்ணை. [14411]

---

## 3-வது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 27 - 01 - 1954

மறைவு: 13 - 10 - 1987

### செல்வி சுசிலா தாமோதரம்பிள்ளை

அன்பின் அணிகலனாய்
ஆசைத் திருமகளாய்
நேசமுடன் வாழ்ந்தாயே
நீசர் குண்டால் மாண்டாயே

ஆண்டு மூன்று ஆனாலும்
ஆறாதம்மா எம்மனது
ஈண்டு உம்மை எண்ணி நாமும்
ஏங்கி நிதம் வாடுகின்றோம்.

அம்மா, சகோதர, சகோதரிகள், அத்தான்மார், அண்ணிமார், மக்கள், மருமக்கள்.

'சிவகுடில்'
கே கே எஸ். வீதி
கொக்குவில்.

Mrs K Thamotharampillai.
Einschlag str-511
4923 Wynau,
Switzerland.

(14400)

---

## வீரவணக்கமும் நினைவலைகளும்



### செல்வன் யோ. ராகவன்

(சந்திரபாபு - வல்வெட்டித்துறை)

[யாழ் இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன்]

வந்துதித்த வண்ணமலராய் ......
06 - 11 - 1972

வல்வையில் வரலாற்றாய் ......
13 - 09 - 1990

திதி- 13 - 10 - 1990

ஆருயிர் நண்ப ........ நீ ......
விளையாட்டு வீரனாய்க் கல்வியில்
வித்தகனாய்ப் பிறரை விஞ்சி நின்றும்
இனிய நின் பால் மனத்தால் பற்பலர
இணைபிரியா நண்பர்களாக்கியும்
பயந்து வாழ்தலிற் பற்றிலாது
பலமிக்க புலிகளுடன் களம்புகுந்து
கொடுங்கோட்டையைக் கைப்பற்றக்
கொந்தளித்த பகைவர்களைக்
கூற்றுவனுக்கு ஊட்டினாய் -விழ்ந்த
வேங்கைகள் பதின்மூன்றிலொன்றாய்ச்
சிரித்திடும் வதனமதை எம்
சிந்தையிலிருத்தி விட்டுச்
சரித்திர ஏட்டினிலிடம் பிடித்துச்
சட்டெனப் பறந்து விட்டாய்
மனத்தினுள் விம்மினோம் இல்லை
மலைதகோம் நின்மண்பற்றின் மணங்கண்டு- ஆம்
மறவா! நீ வல்வையின் வாரிசன்றோ!

★ யாழ். இந்து நண்பர்கள். ★

(14395)

---

## 31 ஆம்நாள்நினைவஞ்சலி



அமரர்

### கந்தையா கோபாலபிள்ளை

(சமாதான நீதவானும்; யாழ்ப்பாணம் கோபால்-அன்சன்ஸ் உரிமையாளரும்)

தோற்றம்: 08 - 12 - 1941 மறைவு: 13 - 09 - 1990

எமது அன்பின் திருவுருவமாய்
பாசத்தின் சிகரமாய்: சமூகசமயத்
தொண்டனாய் வணிகத்தின்
விண்மீனாய். பண்பின் இருப்பிடமாய்
வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!

நீங்கள் திடீரென எங்களைப் பிரிந்து
எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்டீர்கள்
உங்கள் நினைவு என்றென்றும் எம்
நெஞ்சங்களைவிட்டு நீங்காது நிலைத்திருக்கும்;

துயர்மிகுந்த இவ்வேளையில் துணையாய் நின்ற
அன்புள்ளங்களுக்கும் அனுதாபச் செய்தித்
தாள்களால் ஆறுதல் செய்தவர்களுக்கும்
மரணக்கிரியையில் கலந்துகொண்டவர்களுக்கும்
எமது மனப்பூர்வமான உளங்கனிந்த
நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல மூத்த நயினார் புலம் ஸ்ரீ வீரகத்தி
விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

4 ஆம் வட்டாரம்
புங்குடுதீவு,

(14412)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அக்கரை அவலம்

யாழ்ப்பாணத்தில் அரசாங்கப் படைகள் நடத்தி வரும் வான், கடல் தாக்குதல்களில் இருந்து உயிர் தப்பும் ஒரே குறிக்கோளுடன் கடந்த ஒரு சில நாட்களில் பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் தலைநகர் கொழும்புக்குச் சென்றிருக்கிறார்கள். அரச படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் மட்டுமன்றி, நேரடியாகப் பாதிக்கப்பட்டுத் தமது சொந்த வீடுகளை விட்டுக் குடிபெயர்ந்த மக்கள் மட்டுமன்றி, பாதிக்கப்படாத பெரும் எண்ணிக்கையானோரும் இங்கிருந்து கொழும்பு போனவர்களில் அடங்குவர்.

கொழும்பு, யாழ்ப்பாணத்தைவிடப் பாதுகாப்பான இடம் என்று தப்புக் கணக்குப் போட்டு இவர்கள் அங்கே போனார்கள். 1958இல், 1983 இல் கொழும்பிலிருந்து தமிழர்கள் கப்பலில் அகதிகளாக வந்ததை மறந்து போனார்கள். சாவதானாலும் பிறந்த மண்ணில் சாவோம் என்று கூறிக் கொண்டு அப்போது கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த தமிழர்கள் பலர். ஆனால் ஞாபகசக்தி குறைந்தவர்களாக, சொந்த மண்ணைவிட பிறர்பூமியில் பாதுகாப்பும் வசதியும் கிடைக்கும் என நினைத்து இப்போது கொழும்புக்குத் தாவியிருக்கிறார்கள்!

ஆனால், அவர்கள் எதிர்பார்த்ததிற்கு மாறாக யாழ்ப்பாணத்திலிருந்து சென்றவர்கள் மீது அரசாங்கம் பெரும் கெடுபிடிகளைத் தொடங்கி உள்ளது. நூற்றுக்கணக்கான தமிழர்கள் — இளைஞர்கள் மட்டுமல்ல முதியவர்கள், பெண்கள், குழந்தைகள் என்று எல்லோரும் — கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இங்கிருந்து செல்வோர் தலைநகரில் தங்குவதற்குப் பலவிதமான நிபந்தனைகள், கட்டுப்பாடுகள் என்று வேறு.

அத்துடன் நிற்கப் போகிறதா? பொலீஸ் நிலையத்தில் பதிவு செய்யப் போகும் போதும், வீதியால் செல்லும் போதும் எத்தனை கெடுபிடிகள் நடக்கப் போகின்றன? இளைஞர், யுவதிகளை "சந்தேக முத்திரை" குத்தி கண்டபடி கைது செய்து மீண்டும் ஒரு பூஸா உருவாக்கப்படலாம்.

அகதி முகாம்களுக்குப் போங்கள், அகதி முகாமுக்குப் போங்கள் எனக் கூறி, பணயக் கைதிகள் முகாம்கள் உருவாக்கப்படமாட்டா என்பதற்கு என்ன உத்தரவாதம்? புலிகள் கொழும்பிற்குள் வந்துவிட்டார்கள் எனக் கூறிக்கொண்டு அகதி முகாம்களில் உள்ளவர்கள் குண்டர்களால் தீர்த்துக்கட்டப்படமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

பழைய அனுபவங்களிலிருந்து முன்கண்ட கேள்விகள் எழுவதைத் தவிர்க்க முடியாது. இவற்றை முன் யோசனையுடன் உணராமல் கொழும்புக்குச் சென்றவர்கள், செல்பவர்கள் பாவங்கள். அவர்களுக்காக பரிதாபப்படுவதைவிடவேறு எதுவும் சொல்ல முடியவில்லை!

இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சையாகத் தெரிந்ததாகக் கொள்வதைவிட, செத்தாலும் தமிழ் மண் மணக்கச் சாவேன் என்ற உணர்வு இல்லாத தமிழர்கள் இவர்கள் என்றே சொல்லலாம்.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு
# அவசர நிவாரணத் திட்டம்

### சமூகசேவை திணைக்களத்தால் அமுல்

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற சம்பவங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர நிவாரணம் வழங்கும் பணிகள் சமூகசேவை திணைக்களங்களால் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சால நடைமுறைப் படுத்தப்பட்டு தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ள ஒருங்கிணைக்கப்பட்ட திட்டத்துக்கு புறம்பாக இந்தப் புதிய திட்டம் அமுல் செய்யப்படவிருக்கிறது.

இந்தத் திட்டத்தின் பிரகாரம் அமுல் செய்யப்படவிருக்கும் திட்டங்கள் வருமாறு

★ வாராந்த உலர் உணவு விநியோகம் சம்பந்தமான கால எல்லையை அந்த அந்த மாவட்ட அரச அதிபர் தீர்மானிப்பார்.

★ சாதாரண தொழில் வாய்ப்பு இழந்தவர்கள், இடம் பெயர்ந்து வாழ்பவர்கள், மீளத்திரும்ப தொழில்களை ஆரம்பிக்க ஆயிரம் ரூபா நிவாரணம்வழங்கல்

★ உயிரிழப்புக்கு மரணவீட்டுச் செலவாக உடனடியாக இரண்டாயிரம் ரூபா வழங்கல்.

★ மீளக்குடியமரும் குடும்பம் ஒன்றுக்குசமையல் பாத்திரங்கள் கொள்வனவு செய்ய 500 ரூபா வழங்கல்.

★ வீடுகளைத் திருத்த 5 ஆயிரம் ரூபாவரை வழங்குதல்.

★ காயமடைந்தவர்கள் விவாகமானவராக இருந்தால் 25 ஆயிரம் ரூபாவும், 21 வயதுக்கு உட்பட்டவரானால் வைத்திய அறிக்கையைப் பொறுத்து 15 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

★ உயிரிழந்தவர் விவாகமானவராக இருந்தால் 50 ஆயிரம் ரூபாவும், விவாகமாகாதவராக இருந்தால் 25 ஆயிரம் ரூபாவும், 21 வயதுக்கு கீழ்ப்பட்டவராக இருந்தால் 15 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

★ அரச ஊழியர்களைப் பொறுத்த வரையில் பொது நிர்வாக சுற்றறிக்கைகள் 21/88, 49/89, 49/89[1]. 59/89 ஆகியவற்றில் குறிப்பிட்ட நிவாரணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த நிவாரண வேலைகள் அவசர நிவாரணத் திட்டத்துக்கு கீழ் வரும். ஒன்றிணைக்கப்பட்ட நிவாரணத் திட்டத்தின் கீழ் வரமாட்டாது.

இப்படி அத்தியாவசிய சேவைகள் நாயகம் அறிவித்துள்ளார். (இ-3-9)

## கோட்டை பிரிவு சேத மதிப்பீடு

யாழ்ப்பாணம், அக். 13

யாழ் கோட்டைப் பகுதியில் ஏற்பட்ட சேதங்கள் மற்றும் பாதிப்புகள் குறித்து அப்பகுதி கிராம சேவகர் தலைமையிலான குழுவால் இன்று சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் மதிப்பீடு விவரம் சேகரிக்கப்பட உள்ளது.

யாழ்ப்பாணம் கோட்டை, சந்திரச்சந்தி, இலங்கைவங்கி யாழ் ஆஸ்பத்திரி வீதியை உள்ளடக்கியது யாழ் கோட்டைப் பகுதி [ஜே 81] ஆகும்.

குடியிருப்பாளர்கள் வர்த்தக உரிமையாளர்கள் தத்தமது இருப்பிடங்களில் தங்கி இருந்து மதிப்பீட்டாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கோரப்பட்டுள்ளது [இ]

## மின்சாரம்வழங்க முடியாதநிலை

சுன்னாகம்வரை மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டுள்ள போதிலும் உரும்பராய் பகுதியில் இரண்டு மின் மாற்றிகள் "ஓயில்" திருடப்பட்டுள்ளதால் மின்சாரம் வழங்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. (இ-ரி)

# இஸ்ரவேலிய மொஸாட் உளவுப்படை
# இலங்கை இராணுவத்தை கணித்த விதம்!

### முன்னாள் ஏஜன்ட் வெளியிடும் தகவல்கள்

"ஏமாற்றும் வழியில்... மொஸாட் அதிகாரி ஒருவர் உருவாகிறார்; அழிக்கப்படுகிறார்" — என்ற தலைப்பில் இஸ்ரவேல் அரசின் உளவுப் பிரிவான மொஸாட் நிறுவனத்தின் முன்னாள் ஏஜண்ட் விக்ரர் ஒஸ்ட்ரோவ்ஸ்கி எழுதிய புத்தகம் அமெரிக்கா உட்பட பல நாடுகளில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது தெரிந்ததே

இலங்கை அரசபடைகள் தொடர்பாகவும் பல விஷயங்கள் இப்புத்தகத்தில் கூறப்பட்டுள்ளன

அவை பற்றி ஆராய ஜனாதிபதி பிரேமதாஸா தனிநபர் ஆணைக்குழு ஒன்றையே நியமித்திருக்கிறார்.

இப்புத்தகத்தில் இலங்கை அரசபடைகள் பற்றி விக்ரர் ஒஸ்ட்ரோவ்ஸ்கி தெரிவித்துள்ள விடயங்களின் ஒரு பகுதி இங்கு தரப்படுகின்றது.

1980 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இராணுவப் பயிற்சிக்காக இலங்கையின் விசேஷ அதிரடிப்படையைச் சேர்ந்த 9 பேர் இஸ்ரவேல் வந்தனர்.

இஸ்ரவேலில் அவர்கள் மரியாதைக் குறைவாகவே நடத்தப்பட்டனர்.

இராணுவப் பயிற்சிக்காக இலங்கை வீரர்கள் இஸ்ரவேல் வந்த போது மொஸாட்டின் தூரகிழக்கு மற்றும் ஆபிரிக்கப்பிரிவின் தலைவராக அமியார் (Amy-Yaar) என்பவர் இருந்தார்.

இந்த 9 பேர் கொண்ட இலங்கைக்குழுவை வரவேற்க திரு. அமியார் ரெல் அவிவ் விமான நிலையத்துக்குச் சென்றிருந்தார்.

"இவர்கள் எப்போது வருகிறார்கள்? ஒன்றும் செய்யாதீர்கள். இதை பெரிதாகக்காதீர்கள்" — என்று திரு. அமியார் என்னிடம் சொன்னார்.

"இதன் அர்த்தம் என்ன?" — என்று நான் திருப்பிக் கேட்டேன்.

இதற்கு அமியார், "நல்லது. இவர்கள் தூங்கு போன்றவர்கள். வளர்ச்சி அடையாத ஒரு [illegible] இருந்து இவர்கள் வருகிறார்கள். இவர்கள் நீண்டகாலமாக காடுகளுக்கு வெளியில் செல்லாதவர்கள். ஆகவே இவர்களிடம் அதிகம் எதிர்பார்க்கக்கூடாது" — என்று சொன்னார்

#### வீணாகும் நேரம்

இன்னொரு முறை, இலங்கை இராணுவத்தின் உயர்நிலை அதிகாரிகள் குழு ஒன்று ராடர் சாதனம் வாங்குவதற்காக ரெல் அவிவ் (இஸ்ரவேலின் தலைநகர்) வந்திறங்கியது.

எலக்ரோனிக் பொருள்கள் உற்பத்தி நிறுவனமான 'அல்டா'விற்கு அக்குழுவினர் அழைத்துச் செல்லப்பட்டனர்.

குழுவினரைப் பார்த்ததும் 'அல்டா' நிறுவனப் பிரதிநிதி, "இவர்கள் நிச்சயமாக இஸ்ரவேலிடம் இருந்து ராடர் சாதனத்தை வாங்கப் போவதில்லை" — என்று அடித்துக் கூறி விட்டார்

"இந்த முடிவுக்கு ஏன் வந்தீர்"? என்று அந்த நிறுவனப் பிரதிநிதியிடம் நான் கேட்டேன்

இவர்கள் வாங்க விரும்பும் ரடார் பற்றி தொழில்நுட்ப விவரங்கள் இக்குரங்குகளால் (இலங்கை அதிகாரிகளால்) எழுதப்படவில்லை. பிரிட்டிஷ் ராடர் உற்பத்தியாளர் டெக்காவால் இவ் விவரங்கள் எழுதப்பட்டுள்ளன எதனை வாங்கப்போகிறோம் என்பது இவர்களுக்கு ஏற்கனவே தெரியும் இவர்களுக்கு ஒரு வாழைப்பழத்தைக்கொடுத்து வீட்டுக்கு அனுப்புங்கள். உங்கள் நேரத்தை வீணாக்குகிறீர்கள்" — என்று அந்த நிறுவனத்தின் பிரதிநிதி சொன்னார்.

#### ராடர் என்று கூறி சுத்திகரிப்புக் கருவி

மூன்றாவது சம்பவம் — இஸ்ரவேல் வந்த இலங்கை இராணுவக்குழு ஒன்றுக்கு, உயர்செயல் திறமை வாய்ந்த ராடர் சாதனம் என்று கூறி ஒன்று காண்பிக்கப்பட்டது.

உண்மையில் அது ராடர் சாதனமே அல்ல. அது எண்ணெய்க் கசிவின் பின்னர் துறை முகங்களைச் சுத்திகரிக்கும் பெரிய (Vacuum Cleaner) "வாக்கும் கிளீனர்" சாதனமாகும்.

[illegible] உதவும் என்று இலங்கைக் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது. அது மட்டுமல்ல, அந்த நபர் அணிந்துள்ள சப்பாத்தின் அளவு. அந்த நபரின் பெயர், விலாசம், அவருக்கு என்னபிரிவு ரத்தம் என்ற விவரங்களையும் இந்தராடர்சாதனம் கூறும் சக்தி வாய்ந்தது என்றும் இலங்கைக் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

எனக்கு சிரிப்பதற்கே கஷ்டமாக இருந்தது.

விவரங்களைக் கேட்ட இலங்கை இராணுவக் குழுவினர். "இப்படியும் ஒரு தொழில் நுட்ப முன்னேற்றமா"? என்று அதிசயித்தனர். பின்னர் இந்த ராடர் சாதனத்தைப் பொருத்தக் கூடிய கப்பல் தமது நாட்டிடம் இல்லை என்று இலங்கைக்குழுவினர் தெரிவித்தனர்.

அவர்கள் தங்களின் கப்பல்களைப் பற்றி எமக்குத் தெரிவித்தனர். நல்லது, அவர்களிடம் உள்ள கப்பல்கள் பற்றி எமக்குத் தெரியும் அவற்றை நாம் தான் கட்டினோம்.

#### உலக வங்கியை ஏமாற்ற மொஸாட் உதவி

உலக வங்கி மற்றும் முதலீட்டாளர்களை இலங்கை ஏமாற்றுவதற்கு மொஸட் உதவியது.

இதற்காக, மகாவலி அபிவிருத்தித்திட்டம் பற்றிய பூர்வாங்க அறிக்கையைத் தயாரித்து உலக வங்கியைத் திருப்திப்படுத்த மொஸட் உளவு நிறுவனம் இரண்டு இஸ்ரவேலிய கல்விமான்களைப் பயன் படுத்தியது.

இவர்களில் ஒருவர், ஜெருசலம் பல்கலைக்கழகத்தில் பொருளாதார நிபுணராக இருந்தவர், மற்றவர் விவசாயப் பேராசிரியர்

இவர்கள் இருவரும் மகாவலித்திட்டம் பற்றிய முக்கியத்துவம், அதற்கான செலவீனம் பற்றி நிபுணத்துவ அறிக்கையைத் தயாரித்தனர்

மகாவலித்திட்டத்தின் ஒரு பகுதியை நிறைவேற்றும் பெரிய ஒப்பந்தம் ஒன்று இஸ்ரவேலிய நிர்மாண நிறுவனமான 'சோலல் போனா' வுடன் (Solel Bonah) செய்து கொள்ளப்பட்டது.

உலக வங்கிப் பிரதிநிதிகள் காலத்துக்குகாலம் இலங்கை சென்று திட்டத்தின் அமுலாக்கல் பற்றி நேரடிப் பரிசோதனை நடத்தி வந்தனர்.

இந்த அதிகாரிகளை "சுற்றி வளைப்பு" பாதைகளால் அழைத்துச் சென்று எப்படி ஏமாற்றுவது என்று அங்குள்ள [இலங்கையிலுள்ள] உள்ளூர் அதிகாரிகளுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டது.

சில நிர்மாண வேலைகளை பார்க்க விரும்பிய உலக வங்கி அதிகாரிகளை, பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி வேறு பாதைகளால் அழைத்துச் சென்று ஒரே இடத்தை சுற்றிச் சுற்றிக் காண்பித்தனர்.

#### அபிவிருத்திப் பணம் ஆயுதம் வாங்க

இந்த அபிவிருத்தி வேலைகளுக்குக் கிடைத்த பணம் ஆயுதங்களை வாங்கவே இலங்கை அரசால் பயன் படுத்தப்பட்டது.

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் மருமகன் பென்னி (Penny) இஸ்ரவேலுக்கு இரகசியப் பயணம் ஒன்றை மேற்கொண்டார். அவரின்பயணத்தின் போது நான் அவரின் உதவியாளனாக இருந்தேன். அவருக்கு என்னை சைமன் என்ற பெயர் மூலம்தான் தெரியும்.

பென்னியை அவர் போக விரும்பும் இடங்களுக்கு எல்லாம் அழைத்துச் சென்றோம்.

பொதுவான விஷயங்கள் பற்றி நாம் பேசிக்கொண்டோம். இருந்தும் இத்திட்டம் பற்றியும், இதற்கான நிதி எப்படி இராணுவத்திற்கு ஆயுதம் வாங்க பயன்படுத்தப்படுகிறது என்பது பற்றியும் பென்னி எனக்கு வலியுறுத்திக் கூறிவந்தார்.

இத்திட்டம் குறித்து உண்மையில் நாம அக்கறை காட்டவில்லை என்று அவர் குறை கூறினார்.

உலக வங்கியில் இருந்து பணத்தைப் பெற்று ஆயுதங்களை வாங்குவதற்காகவே இத்திட்டம் உருவாக்கப்பட்டது ஆகும்.

இப்படி புத்தகத்தில் முன்னாள் மொஸாட் ஏஜன்ட் விக்ரர் ஒஸ்ட்ரோவ்ஸ்கி எழுதியிருக்கிறார். (இ-எ)

## இயங்குகின்றன

குடாநாட்டின் கிராமப் புறப்பாடசாலைகளில் மாணவர்களின் வரவு சுமாராக இருக்கிறது.

பல பாடசாலைகளில் பதுங்குகுழிகள் அமைக்கும் வேலைகளும் நடைபெறுகின்றன. [ஒ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு பார்க்கச் சென்றவர்கள் மண்டைதீவில் கால் இழப்பு

யாழ்ப்பாணம், அக். 13
மண்டைதீவில் நேற்றுமுன் தினம் (வியாழன்) இடம் பெற்ற மிதிவெடிச் சம்பவத்தில் இருவர் தமது கால்களை இழந்தனர்; மற்றும் ஒரு பெண் காயமடைந்தார்.

இடம் பெயர்ந்து சென்றிருந்த இவர்கள், தமது வீட்டைப் பார்வையிடச் சென்ற போதே மிதிவெடியில் சிக்க நேர்ந்தது.

இந்தச் சம்பவத்தின் போது கிருஷ்ணபிள்ளை மோகனதாஸ் (வயது 14) இடது காலையும், வைரவநாதன் கெங்காதரன் (வயது35) வலது காலையும் இழந்துவிட்டனர்.

இராசநாயகி கிருஷ்ணபிள்ளை (வயது 50) என்ற பெண்ணே காயமடைந்தவர் ஆவார். (ஒ-15)

## இராணுவ நடவடிக்கையால் இறந்தோருக்கான மரணச் செலவுத் தொகை: செயலகத்தில் பெறலாம்

யாழ்ப்பாணம், அக். 13
கடந்த ஜூன் 14ஆம் திகதிக்குப் பின்னர் யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது மரணமானவர்களின் மரணச்சடங்குச் செலவுக்காக இரண்டாயிரம் ரூபா தற்பொழுது யாழ் செயலகத்தால் வழங்கப்பட்டுவருகிறது.

இந்த உதவித் தொகையைப் பெறுவதற்கு, மரணச் சான்றிதழ், கிராமசேவையாளரின் சிபார்சுடன், உதவி அரசாங்க அதிபரின் சிபார்சுக் கடிதம் ஆகியவற்றைச் சமர்ப்பிக்கவேண்டும் என்றும்—

உதவி அரசாங்க அதிபர்களிடம் உள்ள விண்ணப்பப் படிவங்களிலேயே விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த உதவித்தொகை, ஒருவர் இறந்த திகதியில் இருந்து மூன்றுமாதங்களுக்குள்ளேயே பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## மாவீரர் வாரம்

யாழ்ப்பாணம், அக். 13
தமிழீழ மாவீரர் வாரம் அடுத்த மாதம் (நவம்பர்) 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை நடைபெறும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமைச் செயலகம் நேற்று அறிவித்தது.

இம்மாதம் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை நடைபெறும் என்ற தகவல் தவறானது எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மாவீரர் தினத்தை முன்னிட்டு எழுத்தாளர், கலைஞர்கள், மற்றும் இத்துறையில் உள்ளவர்களை ஊக்குவிக்கும் நோக்காகக்கொண்டு நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை, சுவரொட்டி போட்டிகள் நடத்தப்படுகின்றன.

இந்தப் போட்டிகளுக்கான ஆக்கங்களை இம்மாதம் 25 ஆம் திகதிவரை அனுப்பலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. [அ-3]

## மக்கள்கலைஞன் நினைவு தினம்

யாழ்ப்பாணம், அக்.13
இந்திய இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுககு இலக்காகி மரணமடைந்த "மக்கள் கலைஞன்" வீ.எம்.குகராஜாவின் 3 ஆம் ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி ஆன்று ஏழாலை முத்தமிழ் மன்றத்தில் மாலை 4 மணிக்கு நினைவுக் கூட்டம் ஒன்று ஏற்பாடாகியுள்ளது.

இந்தக கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்களும் முக்கிய பல நாடக அறிஞர்களும் நினைவு உரை நிகழ்த்துவார்கள். [உ]

## எழுவர் காயம்

யாழ்ப்பாணம், அக் 13
அராலித் துறைப்பகுதியில் நேற்று முன்தினம் காலை 11 45 மணியளவில் ஹெலி மேற்கொண்ட தாக்குதலில் ஏழு பேர் காயமடைந்தனர்

அவர்கள் கொட்டைக்காடு அரசினர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றனர். [ஒ-3]

## யாழ். பாடசாலை....

கள் தமது பழைய பாடசாலைகளுக்கு செல்ல முடியாத நிலையில் இருந்தால் அவர்கள் தற்போது தங்கியுள்ள இடத்தில் -அருகில் உள்ள- பாடசாலைகளில் தற்காலிகமாகச் சேர்த்துக் கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது

ஆனால் ஆசிரியர்களைப் பொறுத்த வரை இந்த ஏற்பாடு பொருந்தாது என்றும்—

ஆசிரியர்கள் தத்தமது பாடசாலைகளுக்கு சமூகமளிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

[பாடசாலைகள் தொடர்பான மற்றொரு செய்தி 3 ஆம் பக்கத்தில்] [உ-3-5]


HOT SPRING

A Weekly News Magazine Of Current Affairs Published From Jaffna.

★ Authentic presentation of Lively News.
★ To keep oneself abreast of the Issues, Trends and Developments reading of HOT SPRING is a must.

Available at all News Agents from Sunday, 14th. October, 1990.

(C-5301)



ஹப்பி ரெக்ஸ்

மலிவு விற்பனை

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு......

சகல விதமான புடவை வகைகளையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள ......

நாட வேண்டிய ஸ்தாபனம்:

"ஹப்பி ரெக்ஸ்"

இல. 104, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

இச் சலுகை தீபாவளிப் பண்டிகைக் காலத்தில் மட்டுமே

[14441]


## அனைத்து...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
றம் இருக்காது என்று முஸ்லிம் அரசியல் கட்சிகள் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சி ஒன்றின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (அ-எ)

## ஆஸ்திரேலியப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
கும், தமிழ்ப் போராளிகளுக்கும் இடையில் நடைபெறும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி பிரேமதாசா அறிவித்தது குறித்து திரு. ஹோப்பின் கடிதத்தில் நயந்துரைக்கப்பட்டுள்ளதாம்.

இதேவேளை திரு. ஹோப்பின் ஆலோசனையை இலங்கை அரசு அதிகாரிகள் ஆராய்ந்து வருவதாகக் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

## பலாலி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
கடலைவப்புலம் ஒழுங்கையிலும் நீர்வேலி அத்தியார் கல்லூரிக்குச் சமீபமாகவும், கோப்பாய் இராஜ வீதியிலும் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

இதனால் பல இடங்களில் கட்டடங்கள், மின்கம்பிகள், வீதிகள் என்பன சேதமடைந்தன.

இதேவேளை—
பலாலிமுகாமை அண்மித்த பகுதிகளான அம்பனை, கொல்லங்கலட்டி, மாவிட்டபுரம், கட்டுவன், குரும்பசிட்டி போன்ற பகுதிகளை நோக்கி பல மோசமான ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

(ஓ-43-68-72-15)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இரத்தினம் தங்கங்குட்டி

புங்குடுதீவைச் சேர்ந்த திருமதி இரத்தினம் தங்கங்குட்டி அவர்கள் காலமாகிவிட்டார் அன்னார் காலஞ்சென்ற கந்தையா நல்லம்மாவின் மகளும், காலஞ்சென்ற கதிரவேலு மாரிமுத்துவின் மருமகளும், இரத்தினத்தின் அன்பு மனைவியும், லோகேஸ்வரன் (ஜேர்மனி), மகேஸ்வரன் (ஜேர்மனி), விக்கினேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயந்திமலரின் (ஜேர்மனி) அன்பு மாமியாரும் பிரசாந்தின் (ஜேர்மனி) அன்புப் பேத்தியும் திருமதி செல்லத்துரை கனகம்மா, காலஞ்சென்ற சண்முகநாதன், காலஞ்சென்ற திருமதி சிவசரணம் தனவதி ஆகியோரின் சகோதரியும், மனோன்மணி அபிமன்னன், அமராவதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்!
இரத்தினம்.
(கணவர்)

இல. 1. கந்தபுராண வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (14436)

## திரு. இந்திரசித்து தயாபரன்

மண்கும்பான் மேற்கு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் - சிபாஜினியின் அன்புக்கணவரும்; பிரதீஸ், பிரதாப் ஆகியோரின் அன்புத்தந்தையும்; இந்திரசித்து - மகாலட்சுமி தம்பதிகளின் அன்புப் புதல்வருமான இந்திரசித்து தயாபரன் 28 - 09 - 1990 அன்று அல்லைப்பிட்டியில் அகால மரணமானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 30 - 09 - 90 அன்று மண்கும்பானில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்;
த. சிபாஜினி
(மனைவி)

5 ஆம் வட்டாரம்,
மண்கும்பான். (14427)

## திருமதி புஸ்பதேவி குலரத்தினம்

கொள்ளுப்பிட்டி, அப்துல்கபூர் மாவத்தை, இலக்கம் 61 ஐச் சேர்ந்த இளைப்பாறிய கொழும்பு பல்கலைக்கழக பிரதம நூலகர் திருமதி புஸ்பதேவி குலரத்தினம் 12-10-90 வெள்ளிக்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற பேராசிரியர் க. குலரத்தினத்தின் மனைவியாராவார். அன்னாரின் பூதவுடல் உடுவில் வேதாரணியர் வளவில் 18-10-90 சனிக்கிழமை இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும்.

தகவல்!
அபிமன்னசிங்கம் மாணிக்கசோதி

வேதாரணியர் வளவு
உடுவில் [13866]

## 3ஆம் ஆண்டு நினைவாஞ்சலி

சோமசுந்தரம் — இளங்கோ
(பிறேமன்)



மலர்வு: 1973 - 02 - 11 உதிர்வு: 1987 - 10 - 13

வதம் செய்யும் இந்திய இராணுவம் வந்தது
வல்லூறு போலிங்கு வேட்டைகள் செய்தது
பதமாகிப் போனார்கள் எங்கள் தமிழர்கள்
களமாடி வீழ்ந்தவன் எங்கள் இளங்கோ.
அமைதிப் படையினை எதிர்த்த போதிலே
கைதடி மண்ணில் களப்பலி ஆனவன்
சுமைதாங்கி யாகிய எம் இளங்கோவினை
நினையாது விட்டிடில் நாமென்ன தமிழரா?

— சிற்றூர் அவை மக்கள்,
சங்கத்தானை

(சி/5305)

# மரண அறிவித்தல்

## பரமலிங்கம் சரசானந்தராசா
[உப-தபால் அதிபர், தொல்புரம்]

தொல்புரம் கிழக்கைச் சேர்ந்த உப-தபால் அதிபர் ப. சரசானந்தராசா காலமானார்

இவர் காலஞ்சென்ற இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் பரமலிங்கம்-வள்ளியம்மை அவர்களின் அன்பு மகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவானந்தன் [விஞ்ஞானபீடம், யாழ் பல்கலைக்கழகம்], சிவலேஜினி சிவகரன் சிவரஞ்சனி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற வரதராஜா, இரத்தினராசா [இளைப்பாறிய முகாமையாளர், இலங்கை வங்கி], சண்முகராசா [உதவிக் கல்விப் பணிப்பாளர், முல்லைத்தீவு - மன்னார் வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி] ஆகியோரின் சகோதரனும், லோகேஸ்வரி, பாலராணி [விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி] ஆகியோரின் மைத்துனரும், சசிகலா [பாரதிதாசன் பல்கலைக் கழகம், இந்தியா], அபர்ணா ஆகியோரின் சிறிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 13-10-1990 இன்று காலை 10-00 மணியளவில் பொன்னாலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்!
ப. இரத்தினராசா

தொல்புரம். [14443]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 393/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 13-10-1990 அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org